உ

சிவமயம்

# முப்பத்தொன்றாம் திருமுறை மாநாடு - 2011

## திருமுறைப் போட்டிகள்

**(http://www.singaithirumurai.org)**

அன்புடையீர், வணக்கம்.

கடந்த முப்பது ஆண்டுகளாகச் சிங்கப்பூரில் திருமுறை மாநாடு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதற்கு உங்களின் பேராதரவும் உணர்வுப் பூர்வமான ஈடுபாடும் உங்களிடையே ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்வுமே முக்கியக் காரணங்கள். உங்களின் தொடர்ந்த ஆதரவாலும் சைவத்தின் மீது நீங்கள் கொண்டுள்ள பற்றாலும் சிங்கப்பூரில் சைவமும் தமிழும் புத்தொளி பெற்று வளர்ந்து வருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இவ்வாண்டும் (2011) வருகிற ஜூலை மாதம் 23,24, தேதிகளில் முப்பத்தொன்றாம் திருமுறை மாநாடு சிறப்பாக நடைபெற உள்ளது. திருமுறைகளை இளையர்களிடம் பரப்புவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு நடத்தப்படும் இப்போட்டிகளில் மாணவர்களும் மெய்யன்பர்களும் தரும் ஆதரவு சிறப்பாக உள்ளதால் கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் மேலும் சில பிரிவுகளைச் சேர்த்துக்கொள்வதோடு “திருநீற்றுப் பதிகம்” பாராயணமும் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். வழக்கம்போல இவ்வாண்டும் போட்டிகளில் திரளாகக் கலந்து கொள்ளுமாறும், போட்டியாளர்கள் போட்டியின் விதிகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமாறும், பெற்றோர், ஆசிரியப் பெருமக்கள் முழு ஒத்துழைப்பைத் தருமாறும் கேட்டுக்கொள்கிறோம். கடந்த ஆண்டைப்போல் இவ்வாண்டும் போட்டிகளுக்கு இணையத் தளத்தின் மூலமும் விண்ணப்பிக்கலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருமுறைப் போட்டிகள் ஏற்பாட்டுக்குழுவின் சார்பில்,

டாக்டர் ஆ ரா சிவகுமாரன்
ஒருங்கிணைப்பாளர் - திருமுறைப்போட்டிகள்

## I. திருமுறை ஓதும் போட்டி

திருமுறை ஓதும் போட்டி நடைபெறும் இடங்கள்:
24-4-11 ஞாயிற்றுக்கிழமை, காலை 8.30: அருள்மிகு முனீஸ்வரர் ஆலயம் குயின்ஸ்வே
25-6-11 சனிக்கிழமை, காலை 8.30: அருள்மிகு செண்பக விநாயகர் ஆலயம்

1. திருமுறை ஓதும்போட்டி 15 (R1-R13& GR14-GR15) பிரிவுகளாக நடத்தப்பெறும்.
2. போட்டிக்குரிய பாடல்கள் அருள்மிகு தெண்டாயுதபாணி ஆலய ஓதுவாமூர்த்தி திருமுறை காலநிதி சோ வைத்தியநாத தேசிகர் அவர்களால் பாடப்பட்டு ஒலிவட்டில் (Audio CD) பதிவு செய்யப்பட்டுள்ளன. http://www.singaithirumurai.org என்னும் இணையத்தளத்தின் மூலம் இந்த ஒலிவட்டினைப் பெறலாம் அல்லது அருள்மிகு செண்பக விநாயகர் ஆலயம், அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயம், அருள்மிகு ருத்திரகாளியம்மன் ஆலயம் ஆகிய ஆலயங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
3. போட்டியில் பங்கு பெறுபவர்கள் தத்தம் பிரிவுகளுக்குள்ள பாடல்களில் இரண்டைத் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்துப் பாடவேண்டும்.
4. சுதிப்பெட்டி, தாளம் அனுமதிக்கப்படும்
5. கடந்த ஆண்டு இறுதிப் போட்டிகளில் முதற்பரிசு பெற்றவர்கள் இவ்வாண்டு அதே பிரிவில் தனி நபர் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது. எனினும் அடுத்த மேற்பிரிவில் அல்லது குழுப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.
6. குழுப்போட்டிகளில் (GR14, GR15) ஆலயங்கள் மட்டுமே பங்கு பெறலாம். திருமுறைப் பாடல்கள் மட்டுமே பாடலாம். (நேரம் ஒரு குழுவிற்கு 6 நிமிடங்கள் மட்டுமே).

7. போட்டியில் பங்கேற்போர் http://www.singaithirumurai.org என்னும் இணையத்தளத்தின் மூலம் நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

திருமுறை ஓதும் போட்டிகள்

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | தேதி / நேரம் | போட்டிக்குரிய பாடல்கள் (ஒலி நாடாவைக் கேட்க) |
|---|---|---|---|
| **R1-N** | 2.1.2007க்கும் 1.1.2008க்கும் இடையே பிறந்தவர்கள் | **25-6-11 8.30AM** | 1. வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்<br>2. பாடிச்சென்று பலிக்கென்று நின்றவர்<br>3. நத்தார் படை ஞானம்பசு |
| **R2-K1** | 2.1.2006கும் 1.1.2007க்கும் இடையே பிறந்தவர்கள் | **25-6-11 8.30AM** | |
| **R3-K2** | 2.1.2005க்கும் 1.1.2006க்கும் இடையே பிறந்தவர்கள் | **25-6-11 8.30AM** | |
| **R4-P1** | 2.1.2004க்கும் 1.1.2005க்கும் இடையே பிறந்தவர்கள் | **25-6-11 10.30AM** | 1. இன்குர லிசைகெழும் யாழ் முரல<br>2. நன்று நாடொறும் நம்வினை<br>3. பிழையுள பொறுத்திடுவர்<br>4. பாலுக்கு பாலகன் வேண்டி |
| **R5-P2** | 2.1.2003க்கும் 1.1.2004க்கும் இடையே பிறந்தவர்கள் | **25-6-11 10.30AM** | |
| **R6-P3** | 2.1.2002க்கும் 1.1.2003க்கும் இடையே பிறந்தவர்கள் | **25-6-11 10.30AM** | |
| **R7-P4** | 2.1.2001க்கும் 1.1.2002க்கும் இடையே பிறந்தவர்கள் | **25-6-11 1.00PM** | 1.வண்டரங்கப் புணர்கமல மதுமாந்தி<br>2. நெஞ்சம்உமக்கே இடமாக<br>3. செம்மைநலம் அறியாத<br>4. மண்ணில் பிறந்தார் பெறும் பயன் |
| **R8-P5** | 2.1.2000க்கும் 1.1.2001கும் இடையே பிறந்தவர்கள் | **25-6-11 1.00PM** | |
| **R9-P6** | 2.1.1999க்கும் 1.1.2000க்கும் இடையே பிறந்தவர்கள் | **25-6-11 2.30PM** | |
| **R10-S1&2** | 2.1.1997க்கும் 1.1.1999க்கும் இடையே பிறந்தவர்கள் | **24.4.11 8.30AM** | 1. மைமருங் பூங்குழல்<br>2. சிவனெனும் ஓசையல்ல<br>3. கோணிய பிறைசூடியை<br>4. நையாத மனத்தினை நைவிப்பான்<br>5. இடர் களையாரேனும் எமக்கு |
| **R11-S3&4** | 2.1.1995க்கும் 1.1.1997க்கும் இடையே பிறந்தவர்கள் | **24.4.11 8.30AM** | |
| **R12 Open** | 2.1.1986க்கும் 1.1.1995 க்கும் இடையே பிறந்தவர்கள் | **24-4-11 10.30AM** | பஞ்ச புராணம் (விரும்பிய பாடல்கள்) |
| **R13 Open** | 2.1.1986க்கு முன்பிறந்தவர்கள் | **24-4-11 10.30AM** | பஞ்ச புராணம் (விரும்பிய பாடல்கள்) |
| **GR14** குழுப் போட்டி | மேற்படி பிரிவு R4-R9ஐச் சேர்ந்துவர்கள் (6 முதல் 8 பேர் வரை) | **25-6-11 3.00PM** | திருமுறைப் பாடல்கள் மட்டும் |
| **GR15** குழுப் போட்டி | மேற்படி பிரிவு R10-R13ஐச் சேர்ந்துவர்கள் (6 முதல் 8 பேர் வரை) | **24-4-11 10.30AM** | திருமுறைப் பாடல்கள் மட்டும் |

II. திருமுறை வண்ணம் தீட்டும் போட்டி (C1)

**2-4-11 சனிக்கிழமை, மத்தியம் 1.30- இடம்: அருள்மிகு முனீஸ்வரர் ஆலயம், குயின்ஸ்வே**

1. பாலர்பள்ளி மாணவர்களுக்கு உரியது. மூன்று (Nursery, K1, K2) பிரிவுகளாக நடத்தப்படும்.
2. வண்ணம் தீட்டுவதற்குரிய படம் ஏற்பாட்டாளர்களால் வழங்கப்படும். அதில் போட்டியாளர்கள் தாங்கள் கொண்டு வந்துள்ள வண்ணப் பென்சில்களால் வண்ணம் தீட்ட வேண்டும்.
3. போட்டி நடைபெறும்போது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பக்கத்தில் இருத்தலோ என்னென்ன வண்ணங்கள் தீட்டவேண்டும் என்று கூறுதலோ கூடாது.

திருமுறைப் பேச்சுப் போட்டி- 9-7-11 சனிக்கிழமை காலை 8.30
இடம்: அருள்மிகு செண்பக விநாயகர் ஆலயம்

திருமுறைப் பேச்சுப்போட்டி ஒன்பது பிரிவுகளாக நடைபெறும். குறிப்பிட்டப்பட்ட நேரத்திற்கு மேல் பேசும் பேச்சு நடுவர்களால் கருத்தில் கொள்ளப்படமாட்டாது

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | நாள் நேரம் | பேச்சுப் போட்டித் தலைப்புகள் (இவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பற்றிப் பேசலாம்) | பேசும் நேரம் |
|---|---|---|---|---|
| **O1/ P1** | 2.1.2004க்கும் 1.1.2005க்கும் இடையே பிறந்தவர்கள் | **9-7-11 8.30AM** | 1. முருக நாயனார்<br>2. மாசில்வீணைப் பதிகம்<br>3. திருமருகல் | 3 நிமிடங்கள் |
| **O2/ P2** | 2.1.2003க்கும் 1.1.2004க்கும் இடையே பிறந்தவர்கள் | **9-7-11 8.30AM** | | |
| **O3/ P3** | 2.1.2002க்கும் 1.1.2003க்கும் இடையே பிறந்தவர்கள் | **9-7-11 8.30AM** | | |
| **O4/ P4** | 2.1.2001க்கும் 1.1.2002க்கும் இடையே பிறந்தவர்கள் | **9-7-11 9.00AM** | 1.பெருமிழலைக் குறும்பர்<br>2. பச்சைப் பதிகம் (போகமார்ந்த பூண்முலையாள்)<br>3. திருப்புகலூர் | 3 நிமிடங்கள் |
| **O5/ P5** | 2.1.2000க்கும் 1.1.2001க்கும் இடையே பிறந்தவர்கள் | **9-7-11 9.00AM** | | |
| **O6/ P6** | 2.1.1999க்கும் 1.1.2000க்கும் இடையே பிறந்தவர்கள் | **9-7-11 9.00AM** | | |
| **O7/ S1&2** | 2.1.1997க்கும் 1.1.1999க்கும் இடையே பிறந்தவர்கள் | **9-7-11 10.00AM** | 1.அப்பாலும் அடிச்சார்ந்தார்<br>2. ஒன்றுகொலாம் பதிகம்<br>3. திருமறைக்காடு | 5 நிமிடங்கள் |
| **O8/ S3&4** | 2.1.1995க்கும் 1.1.1997க்கும் இடையே பிறந்தவர்கள் | **9-7-11 10.00AM** | | |
| **O9 Open** | 2.1.1995க்கு முன்பிறந்தவர்கள் | **9-7-11 10.00AM** | 1. திருமுறையின் சிறப்பு<br>2. சப்தவிடங்கத் தலங்கள் (தியாகராஜ திருவுருவ வழிபாட்டுத் தலங்கள்) | 5 நிமிடங்கள் |

## III. திருவேடப்போட்டி 2-4-11 சனிக்கிழமை, மத்தியம் 1.30
இடம்: அருள்மிகு முனீஸ்வரர் ஆலயம், குயின்ஸ்வே

1. திருவேடப்போட்டி ஐந்து பிரிவுகளாக நடைபெறும். முதல் மூன்று பிரிவுகள் பாலர்பள்ளி மாணவர்களுக்கு உரியன. நான்காம் ஐந்தாம் பிரிவுகள் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு உரியன.

2. போட்டியில் கலந்துகொள்வோர் குறிப்பிட்ட நாயன்மார்களைப் போல் வேடமிட்டு மேடையில் தோன்ற வேண்டும். பொருத்தமான வேடமிட்டுத் தோன்றுபவர்களுக்கே அதிக மதிப்பெண்கள் வழங்கப்படும்.

3. ஒருவர் மட்டுமே வேடமேற்று வேடத்திற்குரிய பேச்சைப் பேச வேண்டும். ஒரு நிமிடத்திற்குள் அந்த வேடத்திற்கான பேச்சு இருத்தல் வேண்டும். அதற்குமேல் பேசுபவர்களின் கருத்து நடுவர்களால் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

4. உடம்பில் தாங்கி இருக்கும் பொருட்களைத் தவிர மேடையில் வேறு எப்பொருளும் அனுமதிக்கப்பட மாட்டாது.

திருவேடப்போட்டி

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | நாள் நேரம் | திருவேடப் போட்டிக்கான நாயன்மார்கள் / திருமுறை ஆசிரியர்கள் தோற்றம். |
|---|---|---|---|
| **F1/ N** | 2.1.2007கும் 1.1.2008க்கும் இடையே பிறந்தவர்கள் | **2-4-11 3.00PM** | 1. காரைக்காலம்மையார், 2. அதிபத்தர் 3. மங்கையர்க்கரசியார், 4. ஆனாய நாயனார் 5. திருநாளைப்போவார் 6. விறன்மிண்டர் 7. குங்குலியக்கலயர் 8. திருநீலகண்ட குயவனார் 9. திருநீலகண்ட யாழ்ப்பாணர் 10. சேரமான் பெருமாள் நாயனார் 11. மெய்ப்பொருள் நாயனார் 12. திருநாவுக்கரசர் 13. மாணிக்கவாசகர். 14. திருஞான சம்பந்தர். 15. சுந்தரர். |
| **F2/ K1** | 2.1.2006கும் 1.1.2007க்கும் இடையே பிறந்தவர்கள் | **2-4-11 3.30PM** | |
| **F3/ K2** | 2.1.2005கும் 1.1.2006க்கும் இடையே பிறந்தவர்கள் | **2-4-11 3.30PM** | |
| **F4/ P1-P3** | 2.1.2002க்கும் 1.1.2005க்கும் இடையே பிறந்தவர்கள் | **2-4-11 1.30PM** | |
| **F5/ P4-P6** | 2.1.1999க்கும் 1.1.2002க்கும் இடையே பிறந்தவர்கள் | **2-4-11 1.30PM** | |

## V நாடகப் போட்டி 9-7-11 சனிக்கிழமை, பிற்பகல் 1.30
இடம்: அருள்மிகு செண்பக விநாயகர் ஆலயம்

1. நாடகப் போட்டியில் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, தொடக்கக் கல்லூரி, பலதுறை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் பங்கேற்கலாம்.

2. ஆலயங்கள் மூலமாகவே இப்போட்டியில் பங்குகொள்ள இயலும். ஒவ்வொரு ஆலயமும் இரு நாடகக் குழுக்களை அனுப்ப இயலும்.

3. ஒரு நாடகக்குழுவில் நான்கிலிருந்து எட்டு நடிகர்கள் வரை இடம்பெறலாம்

4. நாடகம் 15 நிமிடங்களுக்குள் இடம்பெற வேண்டும். (நடிப்பு, அறிவிப்பு அனைத்தும் உட்பட)

5. நாடகம் தமிழ்மொழியில் நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை ஒட்டியதாக அமைதல் வேண்டும். நாயன்மார்களோடு தொடர்பு இல்லாதவற்றைப் புகுத்துதல் கூடாது.

6. நாடகம் பிற சமயங்களைச் சாடுவதாகவோ சைவசமயத்திற்குக் குந்தகம் விளைவிப்பதாகவோ இருத்தல் கூடாது.
7. நாடகத்தின் செம்மையான எழுத்துப் பிரதியை நாடகம் நடிப்பதற்கு முன்னால் ஏற்பாட்டாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அது திருமுறை மாநாட்டிற்கே சொந்தமாகும்
8. நடிப்பு, வசனம், படைப்புத்திறன், ஒலியமைப்பு, உடை அலங்காரம், மேடை அலங்காரம் முதலியவற்றின் அடிப்படையில் நாடகம் மதிப்பிடப்படும். நீதிபதிகளின் முடிவே இறுதியானது.

VI . திருஞானசம்பந்தர் அருளிய திருநீற்றுப் பதிகம் பாராயணம் 9-7-11, 10.30AM
இடம்: அருள்மிகு செண்பக விநாயகர் ஆலயம்

திருஞானசம்பந்தர் அருளிய அற்புத திருபதிகளுள் ஒன்று திருநீற்றுப் பதிகம். இதன் அருமை பெருமைகளைச் சைவர்கள் உணர்ந்து ஓதுப் பொருட்டு இவ்வாண்டு இப்பாராயண நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது போட்டி யல்ல. பாடலை முழுமையாக ஒப்புவிக்கும் அனவருக்கும் நினைவுப் பொருட்கள வழங்கப்படும்.

திருநீற்றுப் பதிகம்

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | நாள் நேரம் | இடம் |
|---|---|---|---|
| **Thiru-1** | 1-1-1986க்கு பின் பிறந்தவர்கள் 25வயதுக்குக் குறைந்தோர் | **9-7-11 10.30AM** | அருள்மிகு செண்பக விநாயகர் |

VI பொது

1. எல்லாப் போட்டிகளிலும் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. தீர்ப்பை எதிர்த்து முறையீடு செய்ய இயலாது.

2. இப்போட்டிகளில் (திருமுறை ஓதும்போட்டி பிரிவு R12-13, GR15 தவிர) சிங்கப்பூர்க் குடிமக்கள், நிரந்தரவாசிகள் ஆகியோர் மட்டுமே கலந்துகொள்ளலாம்.

3. இணையத்தளத்தின் மூலம் விண்ணப்பங்கள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன.

4. 2 & 24 April 2011 தேதியில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்வோர் போட்டிக்குரிய விண்ணப்பத்தாளை நிறைவு செய்து சமய வகுப்பாசிரியர் அல்லது ஆலய அதிகாரிகளின் கையொப்பத்தைப் பெற்று 19-3-11க்குள்ளும் ஏனைய தேதிகளில் நடைபெறும் போட்டுகளுக்கான விண்ணப்பத் தாட்களை 30.5.11க்குள்ளும் The Co-ordinator, Thirumurai Contest, Blk 116 # 09-249, Bedok North Road, Singapore 460116. என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். மேல் விவரங்களுக்கு 62424988, 98277780, 90059454 ஆகிய எண்களுடன் தொடர்பு கொள்க. இணையத்தள முகவரி (**http://www.singaithirumurai.org**)

திருமுறைகள் ஒலிக்கட்டும் திருவருள் பெருகட்டும்

ஓம் ஓம் ஓம் ஓம்

உ
சிவமயம்

# முத்பத்தொன்றாம் திருமுறை மாநாடு 2011

## தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் திருமுறைப் போட்டி

அன்புடையீர், வணக்கம்.

கடந்த முப்பது ஆண்டுகளாகத் தமிழ் மக்களின் பேராதரவாலும் உணர்வுப்பூர்வமான ஈடுபாட்டாலும் சைவமும் தமிழும் புத்தொளி பெறும் வண்ணம் சிங்கப்பூரில் திருமுறை மாநாடு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இவ்வாண்டு வரும் ஜூலை மாதம் 23, 24 தேதிகளில் முப்பத்தொன்றாம் திருமுறை மாநாடு சிறப்பாக நடைபெற உள்ளது. இவ்வாண்டு வழக்கமாக நடைபெறும் போட்டிகளோடு சிறப்புப் போட்டியாகத் தகவல் தொழில் நுட்ப அடிப்படையில் போட்டி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்போட்டிக்குப் பெற்றோர்களும் ஆசிரியப் பெருமக்களும் முழு ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

திருமுறைப் போட்டிகள் ஏற்பாட்டுக்குழுவின் சார்பில்,

டாக்டர் ஆ ரா சிவகுமாரன்
*ஒருங்கிணைப்பாளர் - திருமுறைப்போட்டிகள்*

## தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் திருமுறைப்போட்டி

பவர்பாய்ண்ட் வில்லைகள் (PowerPoint Slides) தயாரித்தல்

### தலைப்பு : திருமுறைகள் காட்டிடும் அற்புதங்கள்

எதிர்பார்க்கப்படும் கூறுகள்

- அற்புதங்களைப் பற்றிய விவரங்கள்
- அற்புதங்கள் நிகழ்ந்த தலங்கள்பற்றிய குறிப்புகள்
- அற்புதப் பாடல்கள் சிலவற்றின் விளக்கம் (நயத்தோடு)
- மற்றும் சிறப்புக்குரிய செய்திகள்.

படவில்லைகளின் எண்ணிக்கை சுமார் 30-50
பொருத்தமான

- திரைப்படக் காட்சிகள்
- படங்கள்
- பாடல்கள்
- இசை
- புத்தாக்கச் சிந்தனை

முதலிய கூறுகள் மதிப்பெண்கள் வழங்குவதில் கவனத்தில் கொள்ளப்படும்.

ஒருவரே எத்தனை படைப்புகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

ஒருவராகவோ குழுவாகவோ போட்டியில் பங்கெடுக்கலாம்.

<u>பொது</u>

1. இப்போட்டிகளில் சிங்கப்பூர்க் குடிமக்கள், நிரந்தரவாசிகள் ஆகியோர் மட்டுமே கலந்து கொள்ளலாம். (வயது வரம்பு இல்லை)

2. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

3. முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளுடன் இரண்டு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

4. போட்டிக்கு அனுப்பப்படும் படைப்புகள் திருமுறை மாநாட்டினர்கே சொந்தமாகும்.

5. போட்டிகளில் கலந்துகொள்வோர் விண்ணப்பத்தாளை நிறைவு செய்து சமய வகுப்பாசிரியர் அல்லது ஆலய அதிகாரிகளின் கையொப்பத்தைப் பெற்று 25-6-11க்குள் The Co-ordinator, Thirumurai Contest, Blk 116 # 09-249, Bedok North Road, Singapore 460116. என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

6. *மேல் விவரங்களுக்கு* 90235232, 98277780, 90616257 *ஆகிய எண்களுடன் தொடர்பு கொள்க.*

திருமுறைகள் ஒலி(ளி)க்கட்டும் திருவருள் பெருகட்டும்
ஓம் ஓம் ஓம் ஓம் ஓம் ஓம்